| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.R.சாதிர், | திரு K.N.L.சுப்பையாஅவர்கள், |
| நகர்மன்ற தலைவர் | நகர்மன்ற துணைத்தலைவர் (ம), |
| தென்காசி நகராட்சி, | அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் |
| தென்காசி. | தென்காசி நகர்மன்றம். |

நாள்:**01.08.2023**

ஐயா,

பொருள்: நகர்மன்ற சாதரணக் கூட்டம் – தொடர்பாக

---

தென்காசி நகர்மன்ற சாதரணக் கூட்டம் 04.08.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் **03.30** மணிக்கு நகர்மன்றத்தில் நடைபெற உள்ளதால் மேற்படி கூட்டத்திற்கு அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இத்துடன் மேற்படி கூட்ட மன்றத்தின் பொருட்குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

நகர்மன்ற தலைவர்,
தென்காசி நகர்மன்றம்

இணைப்பு : மன்றப் பொருள்

நகல் :

1. பாராளுமன்ற உறுப்பினர், தென்காசி
2. சட்டமன்ற உறுப்பினர், தென்காசி
3. ஆணையர் மேஜைக்கு மற்றும் மேலாளர் மேஜைக்கு
4. பொறியாளர், தென்காசி நகராட்சி
5. சுகாதார அலுவலர், தென்காசி நகராட்சி
6. நகரமைப்பு அலுவலர், தென்காசி நகராட்சி
7. வருவாய் ஆய்வாளர், தென்காசி நகராட்சி
8. சுகாதார ஆய்வாளர், தென்காசி நகராட்சி
9. பத்திரிக்கை நிருபர்கள்.

தென்காசி நகர்மன்ற சாதாரணக் கூட்டம் **04.08.2023** வெள்ளிக்கிழமை முற்பகல் 03.30 மணிக்கு நகர்மன்றத்தில் நடைபெற்றது

## மன்றப்பொருள் 1

### நகர்மன்ற தலைவர். நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோரால் கொண்டு வரப்படும் தீர்மானம்

இந்நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மதிப்பூதியம் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்ட தீர்மானத்தை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண் : 419**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 2

இந்நகர்மன்ற தலைவர் திரு.ர.சாதிர் அவர்கள் இந்நகராட்சியால் வழங்கப்படும் மதிப்பூதியத்தினை தமிழக முதலமைச்சர் அவர்களின் முதலமைச்சர் நிவாரண நிதி சென்னைக்கு மாதமாதம் ரூ.15,000/- யை அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 420**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் பொதுநிதி 2023-24ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை மனு கொடுத்துள்ளதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | பணிகளின்விபரம் | மதிப்பீட்டுதொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 2ல் உள்ள அங்கன்வாடியில் சுற்றுசுவர் அமைத்தல் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 3.50 |
| 2 | வார்டுஎண் 3 மங்கம்மாள் சாலை கலைஞர் நகரில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் | 5.50 |
| 3 | வார்டு எண் 3 மற்றும்வார்டுஎண் 5 ஆகிய இடங்களில் உள்ள சமுதாய நலக்கூடங்கள் மராமத்து மேற்கொள்ளுதல் | 1.50 |
| 4 | வார்டு எண் 4 இரயில்மேட்டுத்தெருவில் 3 எண்ணம்சிறுபாலம்அமைத்தல் | 2.50 |
| 5 | வார்டு எண் 6 மலையான் தெருவில் உள்ள கிணற்றில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் | 5.00 |
| 6 | வார்டு எண் 8 உச்சிமாகாளி அம்மன் கோவில் 2ம் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.00 |
| 7 | வார்டுஎண் 9 பாறையடித் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 6.00 |
| 8 | வார்டுஎண் 10 மவுண்ட் ரோடு மக்கன் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 6.00 |

| | | |
|---|---|---|
| 9 | வார்டுஎண் 11 ஆபாத் பள்ளி வாசல் தெருவில் மழைநீர் வடிகால்அமைத்தல் | 5.00 |
| 10 | வார்டு எண் 12ல் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |
| 11 | வார்டுஎண் 12 & 14 எல்.ஆர்.எஸ்.பாளையம் மற்றும் மேல முத்தாரம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 7.50 |
| 12 | வார்டு எண் 15 ஹரிஹர விநாயகர் கோவில் தெருவில் சிமெண்ட சாலை அமைத்தல் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் மலையான் தெருவில் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 13 | வார்டு எண் 16 கன்னிமாரம்மன் கோவில் தெரு மற்றும் கீழ ஆவணி மூல வீதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும்சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 14 | வார்டுஎண் 17 நடுமாதாங் கோவில் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் | 3.00 |
| 15 | வார்டுஎண் 18 நடுபேட்டைத் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் மறுசீரமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |
| 16 | வார்டுஎண் 19ல் மழைநீர் வடிகால் சீரமைத்தல் | 4.00 |
| 17 | வார்டுஎண் 21 சொர்ணபுரம் மேட்டுத் தெருவில் மழைநீர் வடிகால் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 5.00 |
| 18 | வார்டு எண் 22 உச்சிமாகாளி அம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 3.00 |
| 19 | வார்டுஎண் 23 முப்புடாதி அம்மன் கோவில் தெரு மற்றும் புலிகுட்டி விநாயகர் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 20 | வார்டுஎண் 24 புதுமனை 3 மற்றும் 5ம் தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |
| 21 | வார்டுஎண் 25 மாதாங்கோவில் தெருவில் சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால்அமைத்தல் | 5.00 |
| 22 | வார்டுஎண் 26ல் உள்ள சிமெண்ட் தளக்கற்கள் சாலை மறுசீரமைத்தல் | 3.00 |
| 23 | வார்டுஎண் 27ல் உள்ள சிமெண்ட் தளக்கற்கள் சாலை மறுசீரமைத்தல் | 3.00 |
| 24 | வார்டுஎண் 28 வடக்கு ஒப்பனை பிள்ளையார் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.00 |
| 25 | வார்டுஎண் 29ல் மழைநீர் வடிகால் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 3.00 |
| 26 | வார்டுஎண் 31 சிந்தாமணியில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் | 5.00 |
| 27 | வார்டுஎண் 32 சம்பா தெருவில் (குட்டி டீக்கடை எதிர்புறம்) உள்ள பெரிய மழைநீர் வடிகாலில் தடுப்புவேலி அமைத்த மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 6.00 |

அ.கு : 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 421**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் குடிநீர்நிதி 2023-24ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை மனு கொடுத்துள்ளதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | பணிகளின்விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டுஎண் 1 இரயில்வே ரோடு பகுதியில் 2 எண்ணம் ஆழ்துளையுடன் கூடிய சிறுமின்விசைபம்பு கட்டிடம் அமைத்தல் | 5.00 |
| 2 | வார்டுஎண் 5 களக்கோடி தெருவில் சிறு மின்விசை பம்பு கட்டிடம் கட்டுதல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 7.50 |
| 3 | வார்டுஎண் 7 நேருதெரு, அண்ணா தெரு மற்றும் காமராஜர் தெரு ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசைபம்பு கட்டிடம் கட்டுதல் | 6.00 |
| 4 | வார்டு எண் 13 மேல வாலிபன் பொத்தையில் சிமெண்ட் சாலைஅமைத்தல் மற்றும் தைக்கா தெருவில் இரண்டு அடிபம்பு மற்றும் மேலவாலிபன் பொத்தையில் உளள அடிபம்பு ஆகியவைகளை அகற்றி விட்டு சிறுமின விசை பம்பு கட்டிடம் கட்டுதல் | 5.50 |
| 5 | வார்டுஎண் 17 அருணாசலபுரம் தெருவில் சிறுமின்விசைபம்பு கட்டிடம் கட்டுதல் மற்றும் சிமெண்ட்தளக்கற்கள் சாலை அமைத்தல் | 3.00 |
| 6 | வார்டு எண் 20 SKP தெருவில் சிறுமின்விசைபம்பு கட்டிடம் கட்டுதல் மற்றும் மழைநீர் வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 5.00 |
| 7 | வார்டு எண் 30 மேலமாசிவீதியில் (வாசுகி மருத்துவமனைஅருகில்) உள்ள அடிபம்பினை அப்புறப்படுத்திவிட்டு சின்டெக்ஸ் தொட்டி கட்டிடம் கட்டுதல் | 2.00 |
| 8 | வார்டுஎண் 33 கீழமுத்தாரம்மன் கோவில் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசைபம்பு கட்டிடம் பராமரிப்பு செய்தல் | 1.50 |
| 9 | வார்டுஎண் 33 ஆசாத்நகரில் குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் தடுப்புசுவர் அமைத்தல் | 4.00 |

அ.கு: 1 மேற்படிமன்றம்அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 422**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 5

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள TN76P6941 வாகனத்திற்கு மின்கலப்பெட்டி வாங்கப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டபடியால்

பழுதாகி விட்டது. அதனால் புதிய மின்கலப்பெட்டி வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 11,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மேற்படி வாகனத்திற்கு புதிய மின்கலம் வாங்கவும். அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 423**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 6

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வெளிகொணர்வு முகமை அடிப்படையில் துாய்மை பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், எம்/எஸ். ராம் அன்கோ என்ற நிறுவனம், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளதை, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். 438/2023/எச்1 நாள்.06.05.2023ன்படி பணிகள் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு, நகர்மன்றத் தீர்மான எண்.393 நாள். 05.06.2023 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளபடி வாகனங்கள், பணியாளர்கள் ஈடுபடுத்துவதற்கும், வாகனங்கள் பழுதுநீக்கம் செய்வதற்கும் 15 தினங்கள் காலஅவகாசம் கோரப்பட்டது. இதனை தொடர்ந்து 16.6.2023 முதல் எம்/எஸ். ராம் அன்கோ என்ற நிறுவனத்திற்கு துாய்மை பணியினை மேற்கொள்ள ஒப்படைக்கப்படட நிலையில் மேற்படி நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பணியாளர்கள், வாகனங்கள், ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆகியவற்றை முழுமையாக கொண்டு பணிகள் மேற்கொள்ளாமல் குறைந்த அளவிலான பணியாளர்கள், வாகனங்கள், ஓட்டுநர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப் பட்டது. இதன் காரணமாக நகரில் குப்பைகள் அதிக அளவில் சேகரமாகும் நிலை ஏற்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பணிகள் செய்வது குறித்து அலுவலகம் மூலம் பல்வேறு அறிவிப்புகள் அனுப்பப்பட்டும், நேரில் அறிவுறுத்தியும் எவ்விதமான முன்னேற்றமான நடவடிக்கையினையும் ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனம் மேற்கொள்ளவில்லை.

எனவே நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆகியோர்களிடமிருந்து புகார் மனுக்களும், தினசரி நாளிதழ் மற்றும் ஊடகங்களில் தொடர்ந்து குப்பைகள் அகற்றப்படவில்லை என செய்திகளும் வரப்பட்டன. நாளது தேதி வரை எவ்விதமான நடவடிக்கை எடுக்காத நிறுவனமான எம்/எஸ். ராம் அன்கோ ஒப்பந்தத்தை பொதுசுகாதாரத்தின் அவசரம் அவசியம் கருதியும், நிர்வாகத்தின் நலன் கருதியும், 13.07.2023 முதல் ரத்து செய்யப்பட்டுள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், ராம் அன்கோ என்ற நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொதுசுகாதாரத்தின் அவசரம் அவசியம் கருதி, ஏற்கனவே இந்நகராட்சியில் தனியார் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையின் மூலம் 125 துாய்மை பணியாளர்களைக் கொண்டு துாய்மை பணிகள் மேற்கொண்டு வந்த ஏ.வி.எம். சர்வீஸ் இராஜபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் காணும் விலை விகித அடிப்படையிலும் மற்றும் ஏற்கனவே விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையிலும் 13.07.2023 முதல் மறு ஒப்பந்தம் பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கும் வரை துாய்மை பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும், நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 32945/2022/EA2- SWM 1 Dated.10–01–2023 ன் படி மறு ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1. எம்/எஸ். ராம் அன்கோ என்ற நிறுவனத்தின் வெளிக்கொணர்வு முகமை ஒப்பந்தத்தை பொதுசுகாதார அவசர அவசியம் கருதி 13.07.2023 அன்று ரத்து செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்

2. பொது மக்கள் நலனை கருத்திற்கொண்டும் , பொதுசுகாதாரத்தின் நலனை கருத்திற் கொண்டும், ஏற்கனவே ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட், இராஜபாளையம் என்ற நிறுவனம் 125 துாய்மை பணியாளர்களை கொண்டு துாய்மை பணிகள் மேற்கொள்ளவும், பழைய ஊதிய விகிதத்தின்

அடிப்படையில் ஊதியம் வழங்கவும், மேற்படி நிறுவனத்திற்கு ஊதியத்தினை பொது நிதியில் வழங்கவும், அதற்கான செலவினத்தினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 32945/2022/EA2- SWM 1 Dated.10-01-2023 ன் படி மறு ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 424**

**அனுமதிக்கப்பட்டது.**

## மன்றப்பொருள் 7

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் புதிய பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி அமைக்க நகர்மன்றத் தீர்மான எண் **276** நாள்.**13.01.2023**ன் படி ரூ.**100000/–** மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒலிபெருக்கி அமைக்க கூடுதலாக ரூ.**15000/–** செலவினம் மேற்கொள்ளப்படுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மேற்படி கூடுதல் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 425**

**அனுமதிக்கப்பட்டது.**

## மன்றப்பொருள் 8

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள இலகுரக வாகனம் மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு **நான்கு** ஓட்டுநர்களை ஒப்பந்தம் அடிப்படையில் அமர்த்தப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண்.**401** நாள். **05.06.2023**ன் படி திரு. எம்.சுடலைக்கனி என்பவருக்கு **01.06.2023** முதல் **31.05.2024** வரை ஓராண்டு காலத்திற்கு ஓட்டுநர் பணி மேற்கொள்ளவும், அதற்கான ஊதியமானது பொதுப்பணித்துறையின் மூலம் இலகுரக ஓட்டுநர் மற்றும் கனரக ஓட்டுநர்களுக்கு என நிர்ணயம் செய்யப்பட்ட (SCHEDULE OF RATE) ஊதிய விகிதத்தின் வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

தற்போது சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10.01.**2023**ம் தேதிய ந.க.எண்.**32945/2022**/EA2- SWM-1 செயல்முறை ஆணையின் படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வெளிகொணர்வு முகாமை மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அனுமதித்து, தற்போது **13.07.2023** முதல் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளதால், பொதுசுகாதாரப் பிரிவு இலகுரக வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு கூடுதலாக **ஐந்து** ஓட்டுநர்கள் மட்டும் பணியில் அமர்த்தவும், திரு. சுடலைக்கனி ஒப்பந்தக்காரருக்கு பொதுப்பணித்துறையின் மூலம் இலகுரக ஓட்டுநர் மற்றும் கனரக ஓட்டுநர்களுக்கு என நிர்ணயம் செய்யப்பட்ட(SCHEDULE OF RATE) ஊதிய விகிதத்தின் படி ஊதியம் வழங்கவும், (**13.07.2023** முதல் மறு பணி உத்திரவு வழங்கும் வரை) கூடுதலாக ஐந்து ஓட்டுநர்களை பணியில் அமர்த்தவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. திரு.சுடலைக்கனி ஒப்பந்தக்காரருக்கு ஒன்பது வாகனங்களை இயக்க பொதுப்பணித் துறையின் (SCHEDULE OF RATE) ஊதிய விகிதத்தின் படி ஊதியம் வழங்கவும், 13.07.2023 முதல் மறு உத்திரவு வழங்கும் வரை கூடுதலாக ஐந்து ஓட்டுநர்களை (ஆகமொத்தம் ஒன்பது ஓட்டுநர்களை) கொண்டு ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 426**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 9**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள TN76P6941 வாகனத்திற்கு மின்கலம் விநியோகம் செய்ய 14.07.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளித் தொகை. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ராம் பேட்டரி சென்டர் 182,இ–4/ஜி எஸ்.என்.ரோடு, ஸ்ரீபுரம், திருநெல்வேலி | ரூ.9300/– |
| 2 | ஸ்ரீ பைரவி பேட்டரிஸ், 76/38,பி5–15 ரயில்வே பீடர் ரோடு , எம்.கே.வி..கே. பள்ளி அருகில், தென்காசி | ரூ.9000/– |

மேற்படி விலைப்புள்ளிகளில் வரிசை எண். 2ல் கண்டுள்ள ஸ்ரீ பைரவி பேட்டரிஸ், 76/38,பி5–15 ரயில்வே பீடர் ரோடு , எம்.கே.வி.கே. பள்ளி அருகில், தென்காசி என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளியினை கொடுத்துள்ளதை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.குறைவான கொடுத்துள்ள விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 427**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள் 10**

இந்நகராட்சியின் மீது திருமதி.ரேணுகா என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.5483–2023 நகராட்சி சார்பாக ஆஜரான திரு.ஆதிமூலப்பாண்டியன், அரசு வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.10000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: திரு.ஆதிமூலப்பாண்டியன் அரசு வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.10000/–ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 428**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 11

இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கீழ்கண்ட நபர்களால் கீழ்கண்ட காரணங்களுக்காக தொடரப்பட்ட வழக்குகளுக்கு இந்நகராட்சி சார்பாக ஆஜரான வகைக்கு வழக்கு கட்டணம் வழங்க கேட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் திரு.P.ஆதிமூல பாண்டியன் அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியலில் கண்ட தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண் மற்றும் வழக்கின் விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | W.P(MD)No.2162 of 2022 புதிய பேருந்து நிலையத்தில் தேநீர் கடை அமைக்கக்கூடாது என ஆட்சேபனை தெரிவித்து திரு.G.காந்தையா என்பவரால் தொடரப்பட்ட வழக்கு | 10,000/- |
| 2. | W.P(MD)No.485 of 2021 டம்பர் பிளேசர் லாரி வாங்கியது சம்மந்தமாக P.ஷமீம் இப்ராகீம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு | 10,000/- |
| 3. | Cort.No.798/20 in W.P(MD)No.1245 of 2018 திருமதி.முர்ஷிதா பாத்திமா என்பவரால் டேன் டீ அமைப்பது தொடர்பான வழக்கு | 10,000/- |
| 4. | W.P(MD)No.448 of 2019 குத்தகை சம்மந்தமாக திரு.காந்தையா என்பவரால் தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு | 10,000/- |
| 5. | W.P(MD)No.12942 of 2020 திரு.S.இராமசுந்தரமணி உதவியாளர் (ஓய்வு) என்பவரால் சேமநலநிதி வட்டி கோரி தொடரப்பட்ட வழக்கு | 10,000/- |
| 6. | W.P(MD)No.5066 of 2023 CSI பள்ளியின் மூலம் அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட வழக்கு | 10,000/- |
| 7. | W.P(MD)No.2028 of 2023 திருமதி.திரிபுரசுந்தரி என்பவரால் சொத்துவரி பெயர் மாற்றம் சம்மந்தமாக தொடரப்பட்ட வழக்கு | 10,000/- |
| 8. | W.P(MD)No. 1315 of 2022 திரு.சுந்தரம் என்பவரால் தேர்தல் வார்டு மறுவரையறை மறுசீராய்வு செய்ய கோரி தொடரப்பட்ட வழக்கு | 10,000/- |
| 9. | W.P(MD)No.5233 of 2016 திரு.முருகன் என்பவரால் ஆக்கிரமிப்பு தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு | 10,000/- |
| 10. | W.P(MD)No.2455 of 2014 திரு.S.குமாரசாமி என்பவரால் சேவைவரி சம்மந்தமாக தொடரப்பட்ட வழக்கு | 10,000/- |
| 11. | Cort.No.1601/22 in W.P(MD)No.8334 of 2022 திரு.M.நயினார் முகம்மது என்பவரால் சொத்துவரி பெயர்மாற்றம் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு | 10,000/- |
| | மொத்தம் | 110000/- |

**அ.கு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட தொகையினை நகராட்சிப் பொதுநிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

### தீர்மானம் எண் : 429

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 12

அரசாணை நிலை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.04.2021ன் படி கோயம்புத்தூர் நகரியியல் பயிற்சி மையத்திற்கு ஆண்டுதோறும் நிர்வாக பங்குத் தொகையாக ரூ.75000/-னை செலுத்த ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி இயக்குநர் கோவை நகரியியல் பயிற்சி மைய அலுவலக கடித ந.க.எண்.399/2023/அ2, நாள்.06.07.2023ன் வழிக் கோரப்பட்டுள்ள 2023-24ம் நிதியாண்டிற்கு பங்களிப்புத் தொகை ரூ.75000/-ஐ செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 430**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 13

இந்நகராட்சி வழக்கறிஞர் திருஎஸ்.சுபசேகரை (Standing Council) இந்நகர்மன்ற தீர்மான எண்.407, நாள்.05.06.2023 தேதியின் படி இந்நகராட்சி வழக்கறிஞரிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சி புதிய வழக்கறிஞராக 1.திருமதி.எம்.தாஹிரா பேகம் B.A.,B.L., 2.திரு.எஸ்.முருகன்,B.A.,B.L., 3.திரு.ரகுமான்ஷாதத்,B.A.,B.L., மற்றும் 4.திரு.D.சைமன்துரை,B.A.,B.L., ஆகிய வழக்கறிஞர்கள் நகராட்சியில் வழக்கறிஞராக பதிவு செய்ய விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்துள்ளனர். மேற்படி நபர்களில் ஒருவரை மட்டும் இந்நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்திட மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண் : 431**

மேற்கண்ட நான்கு வழக்கறிஞர்களில் மூத்த வழக்கறிஞரான திருமதி.எம்.தாஹிரா பேகம் அவர்களை நகராட்சி வழக்கறிஞராக ஏகமனதாக மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 14

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் கடைஎண் 23க்கான உரிமத்தினை மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ள 14.07.2023 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியானது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகை/ உரிமத்தின் விபரம் | ஏலக்கேள்வி/ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஏலக்கேள்வி/ ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை எண் 23 | திருமதி. A.ஜெயா<br>5/248 வடக்குதெரு<br>திருமலாபுரம்<br>பனவடலிசத்திரம் தாலுகா. | ரூ.11000/- |
| | | திரு.பி.சிவபிரசாத்<br>25/2 வ.உ.சி.நகர் 6வது தெரு.<br>கோவில்பட்டி | ரூ.10800/- |

அ.கு : மேற்படி கடை எண் 23க்கு மாதவாடகையாக ரூ.11000/- திருமதி.A.ஜெயா 5/248 வடக்கு தெரு திருமலாபுரம் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். தற்பொழுது மேற்படி கடைக்கு ரூ.8050/- மாத வாடகையாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி கடைக்கு ரூ.11000/-த்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.ஜெயா என்பவருக்கு கடையினை ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 432**

புதிய பேருந்து நிலைய கடை எண்.23க்கு 14.07.2023ல் முன் அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் மேற்கண்ட கடைக்கு ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.2520/2022/அ2, நாள்.17.07.2023ல் வழங்கப்பட்ட ஆணையை ரத்து செய்தும் மேற்படி கடையில் தேநீர் உணவு பண்டங்கள் விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன்

திருமதி.ஜெயா என்பவருக்கு கடை எண்.23ஐ ஒப்படைப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி கடையை ஒப்படைப்பு செய்ய அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 15

தென்காசி நகராட்சியில் பொதுநிதி 2023-24ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்415 நாள்05.06.2023ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 28.06.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை(ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் / நிறுவனத்தின்பெயர் |
|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை பணிகளில் சேகரமாகும் குப்பைகளை கணினி மூலம் எடை அளவீடு செய்து இரசீது வழங்கும் இயந்திரம் (Weighing Scale With Thermal Printer And Cloud Operation) 4 எண்ணம் விநியோகம் செய்தல் | 5.00 | 1. 3A Associates மதுரை |
| | | | 2. திருA,ஷேக்அப்துல் காதர் ஒப்பந்தக்காரர் |

அ.கு:

1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட மதுரை, 3A Associates என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 433**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 16

தென்காசி நகராட்சியில் பொதுநிதி 2023-24ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 391 நாள் 05.06.2023ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 20.06.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் / நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 33 ஆசாத் நகரில் உள்ள தார்சாலை அமைத்தல் | 14.30 | திரு K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரர் | 0.05% குறைவு |
| | | | M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 1.67% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருK.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 434**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 17

தென்காசி நகராட்சியில் பொதுநிதி 2023-24ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 411 நாள் 05.06.2023ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 20.06.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் / நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 6 மலையான் தெருவில் உள்ள சமுதாய நலக்கூடத்தின் பின்பு வண்ணான்குளம் அருகில் தடுப்பு சுவர் அமைத்தல் | 19.80 | M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 0.01% குறைவு |
| | | | திரு K.நிஸார் ஒப்பந்தக்காரர் | 2.45% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s PSR Construction ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 435**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 18

தென்காசி நகராட்சியில் பொதுநிதி 2023-24ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 392 நாள் 05.06.2023ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 20.06.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் / நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 33 ஆசாத் நகரில் உள்ள மழைநீர் வடிகால் சரிசெய்து சிறுபாலம் அமைத்தல் | 6.50 | M/s PSR Construction ஒப்பந்தக்காரர் | 0.05% குறைவு |
| | | | திரு K.நிஸார் ஒப்பந்தக்காரர் | 4.73% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s PSR Construction ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 436**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 19

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2023-24ம் ஆண்டின் கீழ் சிப்பம் 1ன்படி தார் சாலைப்பணிகள் மேற்கொள்ள 29.05.2023ம் தேதியன்று நடைபெற்ற 5வது PSMC குழு கூட்டத்தில் ரூ117.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்ப சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் 18484/2023/DO1 நாள் 14.06.2023ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 30.06.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு.

1. **M/s PSR Construction, Sankarankovil**
2. **K.Navaskhan sankarankovil**

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் 03.07.2023ம் தேதியன்று விலைப்புள்ளி திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்/ நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | Renewal of Black Top Surface at Kalidas Nagar Main Road (145001R039), Kalidas Nagar North 2nd Road (145001R040), Railway Road to Mangammal salai (145003R153), Mangamma salai to Railway gate road (145004R207), Utchimahali 2nd Street (145008R284), Utchimahali 4th Street (145008R294), Utchimahali 4th Street (145008R295), Utchimahali 4th Street (145008R296), Paraiyadimettu Street (145011R327), Paraiyadi Mettu Street 1st Cross Street (145011R330), Paraiyadimettu Street 2nd Cross Street (145011R331), Paraiyadimettu Street 3rd Cross Road (145011R332), Sornapuram St (145021R429), Anaikarai Street (145027R513), Anaikarai Street (145032R583) (Package No: 1) | 117.00 | **M/s PSR Construction Sankarankovil**<br>**Thiru K.Navaskhan Sanakrankovil** | 0.10% குறைவு<br>0.26% கூடுதல் |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் **M/s PSR Construction** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விலைவிகிதத்தைவிட 0.10% குறைவு என்ற விகிதத்தில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: 1 மேற்படி பணிக்கு மதிப்பீட்டினைவிட 0.10% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s PSR Construction** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 437**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 20

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2023-24ம் ஆண்டின் கீழ் சிப்பம் 2ன்படி தார் சாலைப்பணிகள் மேற்கொள்ள 29.05.2023ம் தேதியன்று நடைபெற்ற 5வது PSMC குழு கூட்டத்தில் ரூ115.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்ப சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் 18484/2023/DO1 நாள் 14.06.2023ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 30.06.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு.

1. **M/s PSR Construction, Sankarankovil**
2. **K.Navaskhan sankarankovil**

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் 03.07.2023ம் தேதியன்று விலைப்புள்ளி திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்/ நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | Renewal of Black Top Surface at Kalakodi Street Main Road (145005R224), Kalakodi Street Abdulkalam Nagar Main Road (145005R240), Malayan Street 2nd Cross Road (145006R258), Abath Pallivasal to Railway Road (145006R250), Malayan Street (145015R366), Malayan Street Abath Pallivasal to Mount Road (145015R367), Abath Pallivasal to Railway Road (145028R520), South Oppanai Street (145028R525), South Kadaya Street (145028R531) (Package No: 2) | 115.00 | **M/s PSR Construction Sankarankovil** | 0.01% குறைவு |
| | | | **Thiru K.Navaskhan Sanakrankovil** | 0.22% கூடுதல் |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில் **M/s PSR Construction** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விலைவிகிதத்தைவிட 0.01% குறைவு என்ற விகிதத்தில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: 1 மேற்படி பணிக்கு மதிப்பீட்டினைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s PSR Construction** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 438**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 21

தென்காசி நகராட்சி எல்லைக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ம் ஆண்டின் கீழ் அறிவுசார் மையம் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டிடத்திற்கு தேவையான மேசைகள், கணினிகள், புத்தகங்கள் நாற்காலிகள், அலமாரிகள் மற்றும் பிற வசதிகளை ஏற்படுத்த மதிப்பீட்டில் உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ24.48 இலட்சம் போக கூடுதல் தொகை ரூ7.19 இலட்சத்தினை நகராட்சி நிதி மற்றும் 15வது நிதிக்குழு மான்யம் ஆகியவற்றிலிருந்து உரிய விதிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 001/2022/வஅ1, நாள் 12.05.2023ம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி கூடுதல் தொகை ரூ7.19 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி திட்டப்பணிக்கு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ24.48 இலட்சம் போக மீதித் தொகை ரூ7.19 இலட்சத்தினை நகராட்சி நிதி மற்றும் 15வது நிதிக்குழு மான்யம் ஆகியவற்றிலிருந்து உரிய விதிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 439**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 22

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ம் ஆண்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 2 தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய காலனியில் உள்ள L Block பூங்காவில் சுற்றுச்சுவர், நடைபாதை, சிமெண்ட் தளக்கற்கள் மற்றும் கிரில் ஓர்க் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்படி பூங்காவில் மின்விளக்குகள் அமைத்தல், விளையாட்டு சாதானங்கள், ஜிம் உபகரணங்கள் சுகாதா வளாகம் கட்டுதல், தண்ணீர் வசதிகள் செய்தல் மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ15.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி பணிக்கான செலவினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 440**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 23

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2023-24ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 379 நாள் 05.06.2023ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 20.07.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 6 மலையான் தெருவில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் உள்ள கிணற்றினை தூர்வாரி மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 2.50 | திரு I.ஷேக் முகைதீன் ஒப்பந்தக்காரர் | 0.05% குறைவு |
| | | | திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 3.65% கூடுதல் |

அ.கு: மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.I.ஷேக் முகைதீன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 441**

அனுமதிக்கப்பட்டது.

## மன்றப்பொருள் 24

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2023-24ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 380 நாள் 05.06.2023ம் தேதியன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 20.07.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் இணைப்பு இல்லாத பகுதிகளில் 10 | 7.40 | திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.03% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | இடங்களில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி அமைத்தல் | | திரு S.சுடலைமுத்து ஒப்பந்தக்காரர் | 2.40% கூடுதல் |

